**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பொள்ளாச்சி**
முன்னிலை : திரு.மு.ச.ஸ்ரீநாத்.,B.A.,B.L.,(Hons.) L.L.M.,
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி, பொள்ளாச்சி.

2025ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 25 ஆம் நாள் திங்கள்கிழமை
**இ.ம.எண்.3/2025 இன் அ.வ.எண்.356/2018**

கிணத்துக்கடவு வட்டம், சொக்கனூர் கிராமம் நெகம்துக்காரர் தோட்டத்தில் வசிக்கும் லேட். மயில்சாமி மனைவி சுமார் 68 வயதுள்ள கண்ணம்மாள்

... மனுதாரர்/வாதி

/ எதிர் /

1. மாவட்ட ஆட்சியர், மாவட்ட ஆட்சியர் அவர்கள், கோயமுத்தூர்–18

2.சார் ஆட்சியர், சார் ஆட்சியர் அலுவலகம், கோவை ரோடு, பொள்ளாச்சி

3. வட்ட ஆட்சியர், வட்டாட்சியர் அலுவலகம், கோவை ரோடு, கிணத்துக்கடவு

4. வருவாய் ஆய்வாளர், வருவாய் ஆய்வாளர் அலுவலகம், கிணத்துக்கடவு

5. கிராம நிர்வாக அலுவலர், கிராம நிர்வாக அலுவலகம், சொக்கனூர்

6. கிணத்துக்கடவு வட்டம், சொக்கனூர் அஞ்சல், சொக்கனூர், பாப்பேகவுண்டர் தோட்டம், த/பெ.வெங்கடாசலம், 42 வயது ஹரிராம்,

7. கிணத்துக்கடவு வட்டம், சொக்கனூர் அஞ்சல், சொக்கனூர், EMS கவுண்டர் தோட்டம், த/பெ.சின்ன ஈஸ்வரகவுண்டர் மகன் 55 வயது C.மயில்மாணிக்கம்

8. ஊராட்சிமன்ற தலைவர், ஊராட்சிமன்ற அலுவலகம், சொக்கனூர் ஊராட்சி, கிணத்துக்கடவு வட்டம்.

....எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இம்மனுவானது நீதிமன்ற ஆணையர் நியமனம் செய்து தாவா சொத்து அமைந்துள்ள க.ச.18 1/C2 நெ.காலையில் உள்ள பு.ஹெக்.0.14.0 தீர்வை 3.38 மற்றும் மேற்படி பூமியில் பயிர் செய்துள்ள 19 தென்னை மரங்களையும் மற்றும் அதில் பயிரிட்டுள்ள பயிர்களையும் இயற்கை அமைப்பையும் பார்வையிட்டு வரைபடத்துடன் கூடிய அறிக்கை தாக்கல் செய்ய உத்தரவு பிறப்பிக்குமாறு கோரி உரிமையியல் நடைமுறைச்சட்டம் கட்டளை 26 விதி 9 பிரிவு 151ன்படி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

மனு தாக்கல் நாள் : 09.07.2025

இம்மனுவானது கடந்த 14.08.2025 தேதியன்று இறுதி விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு மனுதாரர்/வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.V.மதிசேகர் அவர்கள் முன்னிலையாகியும், 1 முதல் 5 எதிர்மனுதாரர்கள்/ பிரதிவாதிகள் தரப்பில் திரு.S.தேவசேனாதிபதி அவர்கள் முன்னிலையாகியும், 6 முதல் 8 எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் தோன்றாத்தரப்பினர்கள் ஆக்கப்பட்டும் இதுநாள் வரையில் எனது கவனமான பரிசீலனையில் இருந்து வரும் வழக்காவணங்களை பரிசீலித்தும், இன்று இந்நீதிமன்றம் வழங்கும்...

## <u>இறுதி உத்தரவு</u>

முடிவில், இம்மனுவானது தள்ளுபடி செய்யப்பட்டு உத்தரவிடப்படுகிறது. செலவுத் தொகை இல்லை.

## <u>சொத்து விபரம்</u>

கிணத்துக்கடவு வட்டம்சொக்கனூர் கிராமம், க.ச. க.ச.18 1/C2 நெ. காலை பு.ஹெக்.0.14.0 தீர்வை 3.38 மற்றும் மேற்படி பூமியில் பயிர் செய்துள்ள 19 தென்னை மரங்களும் மற்றும் அதிலுள்ள பயிர்களுக்கும் வழிதட பாத்தியமும் சகிதம். ஷை பூமிகள் தற்போதைய வகைப்பாட்டின்படி நத்தம் புல எண் 956/12க்கு கட்டுப்பட்டதாகும்.

இவ்வுத்தரவு 2025ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 25ஆம் நாள் என் கையொப்பமும் இந்நீதிமன்ற முத்திரையும் இடப்பட்டது.

ஒம்/.......(மு.ச.ஸ்ரீநாத்)
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
பொள்ளாச்சி

-----------------------------------

**<u>இறுதி உத்தரவு</u>**

ஐ.ஏ.03/2025 இன் ஓ.எஸ்.356/2018

நாள் : 25.08.2025

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,

பொள்ளாச்சி.

-----------------------------------